செய்தி வெளியீடு நாள்: 20.03.2020

தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, கடை மற்றும் மருந்தங்களில் நோய்த்தடுப்பு உபகரணங்களாக பயன்படுத்தப்படும் முகக்கவசம் மற்றும் காய்ச்சல் கண்றியும் கருவி உள்ளிட்டவைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறிவுறுத்தப் பட்டிருந்தது.

இந்நிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களின் தலைமையில் இன்று (20.03.2020) தமிழ்நாடு மருந்து விற்பனையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கெரோனோ நோய்த் தடுப்பு உபகரணங்களாக பயன்படுத்தப்படும் முகக்கவசம் மற்றும் காய்ச்சல் கண்டறியும் கருவி உள்ளிட்டவைகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதில்லை என்று தமிழ்நாடு மருந்து விற்பனையாளர்கள் சங்கம் முடிவு செய்துள்ளதாக சங்கத் தலைவர் திரு. செல்வன் தெரிவித்தார்.

கெரோனோ நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு தீவிரமாக மேற்கொண்டு வரும்நிலையில் தமிழ்நாடு மருந்து விற்பனையாளர்கள் சங்க நிர்வாகிகள் இக்கூட்டத்தினை கூட்டியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

உடன் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவை கழக மேலாண் இயக்குநர் மரு. உமாநாத், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் திரு. நாகராஜன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறை இணை செயலாளர் முனைவர் நடராஜன், இ.ஆ.ப., மருந்துகள் கட்டுப்பாட்டு துறை இயக்குநர் திரு. சிவபாலன், தமிழ்நாடு மருந்து விற்பனையாளர்கள் சங்க தலைவர் திரு. செல்வன், பொருளாளர் திரு இளங்கோவன் சங்க நிர்வாகிகள் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.